"தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"
தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து
Tamil Education Service Switzerland

# பொதுத்தேர்வு 2019

## தமிழ்மொழி ஆண்டு 6

**நேரம்: 120 நிமிடம்** **சுட்டெண்:** ________________

**வினாத்தாளில் விடை எழுதுக.**

## பகுதி - 1

**1. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. மூதுரையை இயற்றியவர்
(பாரதிதாசன், ஔவையார், காசி ஆனந்தன்)

2. உயிர் நெடில் எழுத்துகளின் எண்ணிக்கை
(பன்னிரண்டு, ஏழு, முப்பது)

3. கோழி கொக்கரிக்கும் அதுபோல ஆந்தை
(அலறும், கரையும், கூவும்)

4. செயலை உணர்த்தி நிற்கும் சொல்
(வினைச்சொல், இடைச்சொல், பெயர்ச்சொல்)

5. ஈழத்தின் கிழக்கு மாகாணத்தில் அமைந்திருக்கும் நகரம்
(யாழ்ப்பாணம், கொழும்பு, திருகோணமலை)

6. எனது அம்மம்மாவின் தாயார் எனக்கு
(பேர்த்தி, பூட்டி, பாட்டி)

7. எழில், வனப்பு, பொற்பு என்பவற்றைக் குறிக்கும் சொல்
(கோபம், அழகு, விருப்பு)

8. ஆசிரியரும் மாணவர்களும் சுற்றுலாச் சென்றனர். இதில் வந்துள்ள இடைச்சொல் உணர்த்தும் பொருள்
(முற்று, எண், எச்சம்)

9. 'ஏ' எனும் ஓரெழுத்துச் சொல் குறிப்பது
(பூச்சி, வலி, அம்பு)

10. ஆயிரம் பேர் அணிவகுத்தாலும் ஆரவாரம் இராது. அது
(எறும்புகளின்கூட்டம், ஈக்களின்கூட்டம், குருவிகளின்கூட்டம்)

11. 'மனதில் உறுதி வேண்டும் வாக்கினில் இனிமை வேண்டும்...' எனப் பாடியவர்
(கனக சுப்புரத்தினம், மகாகவி பாரதியார், நா.முத்துக்குமார்)

12. பெயர்ச்சொல்லை செயப்படுபொருளாகக் காட்டும் வேற்றுமை
(1ஆம் வேற்றுமை, 2ஆம் வேற்றுமை, 8ஆம் வேற்றுமை)

13. வில்கெம் ரெல்லை சிறைப் பிடித்தவன்
(கெஸ்லர், கப்ஸ்பூர்கர், நெப்போலியன்)

14. மாணவர்கள் பட்டம்விட்டு மகிழ்ந்தனர். இதில் மகிழ்ந்தனர் என்பது
(ஆண்பால், பலவின்பால், பலர்பால்)

15. பள்ளிச்சிறார்கள் பள்ளி முடிந்ததும் ஆடிஆடி வந்தார்கள். இதில் ஆடிஆடி என்பது
(உவமைத்தொடர், அடுக்குத்தொடர், மரபுத்தொடர்)

(15×1=15 புள்ளிகள்)

**2. ஒத்தபொருட்சொல் எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| 1. உதிரம் | ____________ | 4. பணி | ____________ |
| 2. வனம் | ____________ | 5. ஆசை | ____________ |
| 3. கனி | ____________ | 6. பனுவல் | ____________ |

(6×1=6 புள்ளிகள்)

**3. எதிர்ப்பொருட்சொல் எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| 1. நட்பு | ____________ | 4. கொடுத்தல் | ____________ |
| 2. வீரன் | ____________ | 5. இன்பம் | ____________ |
| 3. முதுமை | ____________ | 6. ஏழை | ____________ |

(6×1=6 புள்ளிகள்)

**4. சேர்த்தெழுதுக.**

1. ஆறு + சுவை = ____________________
2. கண் + நீர் = ____________________
3. திருமணம் + விழா = ____________________
4. காப்பு + அரண் = ____________________
5. இயற்கை + அழிவு = ____________________
6. கூட்டு + ஆட்சி = ____________________

(6×1=6 புள்ளிகள்)

**5. பிரித்தெழுதுக.**

1. பரிதிக்கோளம் = ____________ + ____________
2. பத்தொன்பது = ____________ + ____________
3. மரவேர் = ____________ + ____________
4. நற்பண்பு = ____________ + ____________
5. குழலிசை = ____________ + ____________
6. செந்நிறம் = ____________ + ____________

(6×1=6 புள்ளிகள்)

**6. தரப்பட்ட சொற்களை வைத்து மூதுரையை நிறைவு செய்க.**

| | | |
|---|---|---|
| நல்லார் | வாய்க்கால் | தொல்லுலகில் |
| ஆங்கே | பொருட்டு | மழை |

நெல்லுக்கு இறைத்த நீர் ____________ வழி ஓடிப்

புல்லுக்கும் ____________ பொசியுமாம் - ____________

____________ ஒருவர் உளரேல் அவர் ____________

எல்லார்க்கும் பெய்யும் ____________.

(6×½=3புள்ளிகள்)

**7. கீழ்க்காணும் வாக்கியங்களில் எழுவாய் அடை, எழுவாய், பயனிலை அடை, பயனிலை என்பவற்றைத் தெரிவுசெய்து அட்டவணைப்படுத்துக.**

1. வெள்ளைப்பூனை பாலை நக்கிக் குடித்தது.
2. சுட்டிப்பையன் பாட்டை இனிமையாகப் பாடினான்.
3. சிறிய பொய்கையில் சிவந்த பூக்கள் மலர்ந்து இருந்தன.
4. நெடியமரம் புயற்காற்றினால் விழுந்தது.

| எழுவாய் அடை | எழுவாய் | பயனிலை அடை | பயனிலை |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(16×½=8 புள்ளிகள்)

**8. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. நிலத்தில் ஏற்படும் இயற்கை அழிவுகள் எவை? (1புள்ளி)

2. தமிழர் பாரம்பரிய விளையாட்டுகளுள் இரண்டினைத் தருக. (1புள்ளி)

3. நீதி நூல்கள் நான்கினைத் தருக. (1புள்ளி)

4. மெய்யெழுத்துகள் எத்தனை? அவற்றை வகைப்படுத்துக. (2புள்ளிகள்)

5. வேற்றுமை என்றால் என்ன? 4ஆம் வேற்றுமை உருபையும் பொருள்களையும் தருக. (2புள்ளிகள்)

6. எச்சவினை என்றால் என்ன? (1புள்ளி)

**9. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைப்பற்றி 75 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

(7 புள்ளிகள்)

1. சுவிஸ் நாடும் அதன் இயற்கை அழகும்
2. நோயற்ற வாழ்வு வாழ்வோம்
3. வில்கெம் ரெல்

## பகுதி – 2

**1. பொருத்தமான மரபுத்தொடர்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.**

| | | |
|---|---|---|
| கைகலத்தல் | கைதூக்கிவிடுதல் | அடுக்குப்பண்ணுதல் |
| தலை எழுத்து | கரைத்துக்குடித்தல் | இரண்டகம் செய்தல் |

1. துன்பம் வரும்போது ஒருவரைக் ____________________ சிறந்த பண்பாகும்.
2. எமக்கு உதவி செய்தோருக்கு ____________________ கூடாது.
3. நாம் பயணம் செல்வதற்கு முன்பு ____________________ வேண்டும்.
4. மனிதவாழ்க்கைக்கு வழிகாட்டும் திருக்குறளை ____________________ நன்று.
5. வாழ்க்கையில் வரும் இன்பதுன்பங்களைத் ____________________ என்பர்.
6. வீதியில் நின்ற இரு குழுக்களுக்கு இடையில் ____________________ ஏற்பட்டது.

(6×1=6 புள்ளிகள்)

**2. கீழ்க்காணும் நிகழ்ச்சி நிரலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**தமிழ்ப்பள்ளி 25ஆவது ஆண்டுவிழா 25.01.2019**

**நிகழ்ச்சி நிரல்:**

| | |
|---|---|
| நேரம்: 9.00 மணி | மங்கலவிளக்கேற்றல் (ஆசிரியர்கள், பள்ளிமுதல்வர்) |
| 9.15 மணி | இறை வணக்கம் |
| 9.20 மணி | தமிழ்மொழி வாழ்த்து, கல்விச்சேவைக் கீதம் |
| 9.30 மணி | வரவேற்புரை - மாணவன் செல்வன் தமிழமுதன் |
| 9.35 மணி | வரவேற்பு நடனம் |
| 9.40 மணி | அபிநயப்பாடல் - மழலையர் பிரிவு |
| 9.50 மணி | பேச்சு - 'ஒழுக்கமே உயர்வு' |
| 10.00 மணி | கருத்துக்களம் - 'தாய்மொழிக் கல்வியின் அவசியம்' - 10ஆம் ஆண்டு மாணவர்கள் |
| 10.30 மணி | முதன்மை விருந்தினர் உரை |
| 11.00 மணி | வில்லிசை – 'உண்மையே வெல்லும்' |
| 11.30 மணி | போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கல் |
| 12.30 மணி | இடைவேளை |
| 13.30 மணி | நாடகம் |
| 14.00 மணி | பள்ளி முதல்வர் உரை |
| 14.15 மணி | நன்றியுரை - மாணவி செல்வி ஈழமணி |

1. மங்கலவிளக்கினை ஏற்றியவர்கள் யாவர்?

_______________________________________________

2. தமிழ்ப்பள்ளியின் எத்தனையாவது ஆண்டுவிழா நடைபெற்றது?

_______________________________________________

3. முதன்மை விருந்தினரின் உரை எத்தனை மணிக்கு நடைபெற்றது?

_______________________________________________

4. இவ்விழாவில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் சிலவற்றைத் தருக.

_______________________________________________

5. வில்லிசையின் தலைப்பு என்ன?

_______________________________________________

6. நன்றியுரை கூறியவர் யார்?

_______________________________________________



(6×1=6 புள்ளிகள்)

**3. கீழ்க்காணும் வாக்கியங்களை உமக்குத் தெரிந்த பிறமொழியில் மொழிபெயர்த்து எழுதுக.**

1. தமிழ் பழைமையான மொழி ஆகும்.

___

2. பாட்டியின் சமையல் சுவையானது.

___

3. சுவிஸ் ஐரோப்பாக் கண்டத்தில் உள்ளது.

___

4. மயில் அழகான பறவை.

___

5. கோடை விடுமுறைக்குத் தாயகம் செல்வேன்.

___

6. வெண்பனியில் சறுக்கி விளையாடுவோம்.

___

(6×½=3 புள்ளிகள்)

| பணியகப் பயன்பாட்டிற்கு: | | | |
|---|---|---|---|
| **விடைத்தாள் மதிப்பீடு** | **முழுப்பெயர்** | **கையொப்பம்** | **மொத்தப்புள்ளிகள்** |
| **முதலாம் முறை** | | | |
| **இரண்டாம் முறை** | | | |
| **இறுதிப்புள்ளிகள்** | | | |